**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்.**

MCOP No: 161/2020 நாள் 18.08.2025

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் நிர்வாக அலுவலர் (சட்டம்) ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு எ.ம.சா.1 ஆக 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் A.சாரதிதேவி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திவாகர் | தாலுகா | |
| த-பெ | பழனி | தொழில் | நிர்வாக அலுவலர் (சட்டம்) |
| கிராமம் | | வயது | 26 |

**முதல் விசாரணை**

எனது சாட்சிய பிரமாண பாத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். TN 84 F 9298 காப்பீடு கழக பாலிசி சான்றிட்ட நகல் நிபந்தனைகளுடன் **எ.ம.சா.ஆ.1**.

**குறுக்குவிசாரணை மனுதாரர்கள் தரப்பில்**

வழக்கு விபரம் எனக்கு நேரடியாக தெரியாது ஆவணத்தின் மூலமாக சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள எமசா.ஆ.1 பாலிசியானது பேக்கேஜ் பாலிசியா என்று கேட்டால் இல்லை. Long term Two weelar bundled Policy ஆகும். TN 84 F 9298 என்ற வாகனமானது விபத்து சமயத்தில் எங்கள் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடும் நிலுவையில் இருந்துள்ளது என்று சொன்னால் நிபந்தனைக்குட்பட்டு இருந்துள்ளது. விபத்து நடந்த தேதியானது 05.10.2019 ஆகும். இந்த தேதியில் Liability Policy மற்றும் Own Damage இரண்டும் ஊர்ஜிதத்தில் இருந்துள்ளது என்று சொன்னால் 3ம் தரப்பினருக்கு Liability Policy ஊர்ஜிதத்தில் இருந்தது. உரிமையாளர் ஓட்டுநராக இருக்கும் பட்சத்தில் Own Damage ஊர்ஜிதத்தில் இருந்தது.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 18th day of August 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.